O.S. No: 87/2015

பெயர்: ஆனந்த்

**பி.சா. 6**

24-11-2025

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போதைய மாவட்ட பதிவாளர் 2021இல் இருந்து இங்கு பணியாற்றுகிறார். இந்த உயிலை டெப்பாசிட் செய்த போது ராஜா என்கின்ற மாவட்ட பதிவாளர் இருந்தார். அவர் தற்போது சர்வீஸில் தான் இருக்கிறாரா என்றால் தெரியாது. உயிருடன் இருக்கிறாரா என்றால் தெரியாது. உயில் டெப்பாசிட் செய்வதற்கான நடைமுறை என்ன என்றால் பதிவு சட்டத்தின் படி செய்யவேண்டும். உயிலை டெப்பாசிட் செய்து வைத்திருந்த கவரை கொண்டு வந்திருக்கிறேன். அந்த கவரில் உள்ள கையெழுத்து யார் யாருடையது என்று எனக்கு நேரடியாக தெரியாது. இதில் நாகராஜ் கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. இந்த கையெழுத்து மாவட்ட பதிவாளர் முன்பாக போடப்பட்டதா என்று எனக்கு தெரியாது. இந்த சாட்சிகள் மாவட்ட பதிவாளர் முன்பாக போட்டார்களா அல்லது இந்த கவர் கொண்டுவரும் போதே கையெழுத்து போடப்பட்டு கொண்டு வரப்பட்டதா என்று தெரியாது. கவரின் பின்னால் அரக்கு சீல் வைத்து போடப்பட்ட கையெழுத்து யாருடைய கையெழுத்து என்றால் அது நாகராஜின் கையெழுத்து. முன்னால் போடப்பட்ட கையெழுத்திற்கும் பின்னால் போடப்பட்ட கையெழுத்திற்கு வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. இந்த சீல்டு கவர் சம்மந்தமாக விசாரணை நடைபெற்ற விவரம் எனக்கு தெரியாது. சீல்டு கவர் நாகராஜ படையாச்சியால் தான் கொடுக்கப்படுகிறது என்பதை விசாரித்து மாவட்ட பதிவாளர் உறுதி செய்தாரா என்றால் விவரம் எனக்கு தெரியாது. இந்த உயில் டெப்பாசிட் செய்த நேரம் மாலை 4 to 5 மணி. இந்த உயிலை பிரித்து பார்த்தது எப்பொழுது என்றால் 09/01/2015. இந்த உயிலை பிரித்து பார்க்க எஸ்.கண்ணன் என்கின்ற சுந்தர்ராஜன் 07/01/2015

அன்று மனு கொடுத்தார். சீல்டு கவர் உயிலுடன் கொடுத்த போது இருந்த மாவட்ட பதிவாளர் அசோகன். அதை பிரித்து பார்த்த போது இருந்த மாவட்ட பதிவாளர் ராஜா. அசோகன் தற்போது சர்வீஸில் இருக்கிறார். எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. கண்ணன் கொடுத்த மனுவை கொண்டுவந்திருக்கிறேன். இந்த மனுவில் உள்ள கையெழுத்து கண்ணன் கையெழுத்து அல்ல என்றாலும் இதை யார்போட்டு கொடுத்தார்கள் என்றால் அந்த மனுவில் கண்ணன் என்று தான் உள்ளது. மனுவில் 05/01/2015 என்று உள்ளது என்றால் ஆமாம். சா.சா.ஆ.7 இல் உள்ள 01/2012 என்பது சீல்டு கவரின் உள்ள எண் ஆகும். கண்ணன் என்கின்ற சுந்தர் கொடுத்த மனுவில் உயில் எழுதிய தேதி 16/07/2012 என்று உள்ளது என்றால் சரி. இந்த கவரில் This pocket contains will dated 23/05/2012 written by N. Nagarajan. This pocket has been sealed in 7 (Seven) places. Inscription of the seal என்ற போடப்பட்டு கீழே நாகராஜன் கையெழுத்து உள்ளது. அந்த சீல் எதற்காக போடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த விவரம் டெப்பாசிட் செய்த போது இருந்த மாவட்ட பதிவாளர் அல்லது பிரித்த போது இருந்த மாவட்ட பதிவாளரை தான் விசாரிக்க வேண்டும் என்றால் ஆமாம். அவ்வாறு எழுதப்பட்ட மேல் குறிப்பு **சா.சா.ஆ– 8 ஆகும்.** இந்த உயிலை பிரித்த பிறகு மனநிறைவு அடைந்த பிறகு சார் பதிவாளரிடம் கொடுத்துவிடுவார். சார் பதிவாளர் அதை ஆவணமாக பதிவு செய்வார். அதை இணை–1 சார் பதிவாளர் பதிவு செய்துள்ளார். அவ்வாறு பதிவு செய்த பின்னர் அசல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தான் இருக்கும்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.